<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>

OS.72/2017 நாள். 02.09.2021

PW1 - சகாதேவராஜா

<u>1 முதல் 16 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தாவா 8ம் லக்க சொத்திற்கு சர்வே எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தாவா 8ம் லக்க சொத்திற்கு எங்கள் சங்கத்தின் பெயரில் பட்டா இல்லை. முதல் பங்காளி வகையறா 1938ம் வருடம் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பத்திரத்தில் தாவா 8ம் லக்க சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பங்காளி வகையறா தான் மேற்படி சொத்துக்கு இன்றுவரை தீர்வை செலுத்தி வருகிறார்கள் என்று சொன்னால் 3 பங்காளிகளும் சேர்ந்து தான் செலுத்தி வருகிறோம். நான் 8ம் லக்க சொத்திற்கு தீர்வை செலுத்தியதை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா 8ம் லக்க சொத்திற்கு முதல் பங்காளி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அதற்கு பட்டாவே கிடையாது. மம்சாபுரத்தில் உள்ள தாவா 6ம் லக்க சொத்திற்கு தான் தாக்கல் செய்துள்ள வாசாஆ61 தான் அதன் பட்டா என்றால் சரிதான். இன்று வரை வாதி சங்கத்தின் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ61 பட்டா முதல் பங்காளி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ62 எங்கள் சங்கம் பதிவு செய்த பின்பு 6வது அயிட்ட சொத்திற்கு நான் செலுத்திய தீர்வை ரசீது என்றால் சரிதான். வாசாஆ62 ரசீதில் கண்டுள்ள பெயருக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான். நான் மோசடியாக வாசாஆ62 தீர்வை ரசீது வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி சங்கத்தை பதிவு செய்த பின்பு 5ம் லக்க சொத்திற்கு நான் பெற்ற பட்டா தான் வாசாஆ64. இந்த பட்டா வழங்கப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்து 1ம் பிரதிவாதி வகையறா இராஜபாளையம் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ64 பட்டா மாற்றம் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதியிடம் ஆட்சேபனை வாங்கி கோட்டாட்சியர் உத்தரவு வழங்கினார்

என்றால் சரிதான். நான் அந்த உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்தால் இந்த விசாரணையின் போது 1ம் பிரதிவாதியை விசாரித்து அவர் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்று தெரியவரும் என்றால் சரிதான். அந்த விசாரணையில் நாங்கள் ஆஜர்ப்படுத்திய ஆவணங்கள் என்ன என்றும் அந்த உத்தரவை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை விசாரிக்காமல் நான் அந்த பட்டாவை பெற்றதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோட்டாட்சியர் விசாரணையில் நான் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்று கேட்டால் அந்த உத்தரவை பார்த்தால் தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ63 மின் கட்டண ரசீது சம்மந்தப்பட்ட மின் இணைப்பு 1ம்பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது. வாசாஆ63 மின் இணைப்பை வாதி வங்க பெயருக்கு மாற்றம் செய்வதற்காக மேற்கூறிய மின் கட்டணம் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய மின் இணைப்பு இலவச மின்சார இணைப்பு என்றால் சரிதான். 4ம் லக்க சொத்திற்கான பட்டாவான வாசாஆ51 எங்கள் சங்கத்தை பதிவு செய்த பிறகு சாத்தூர் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து தான் மாற்றப்பட்டது. வாசாஆ51 வழங்குவதற்கு முன்பு கோட்டாட்சியர் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த உத்தரவை பார்த்தால் 1வது பிரதிவாதியை விசாரித்து அதன் பின்னர் பட்டா வழங்கப்பட்டதா என்ற விபரம் தெரிந்து கொள்ளலாம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை விசாரிக்காமல் அந்த பட்டாவை வாங்கியதால் தான் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 4ம் லக்க சொத்திற்கு வாதி சங்கத்தின் பெயரில் பத்திரம் உள்ளது. அதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். 6ம் லக்க சொத்திற்கு வாதி சங்கத்தின் பெயரில் பத்திரம் இல்லை. இராஜபாளையம் இந்தியன் வங்கியில் 2ம் பிரதிவாதியை தலைவராக காண்பித்து ஒரு கணக்கு உள்ளதா என்றால் அப்படி இல்லை. அந்த கணக்கை யார் நிர்வாகம் செய்து வந்தார்கள் என்றால் தர்ம பொதுப்பண்டு சங்கம் நிர்வாகம் செய்தது. இந்த கணக்கில் இருந்து

தான் 1ம் பிரதிவாதி வகையறா பணம் கையாடல் செய்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனந்தராஜும், வங்கி மேலாளரும் கூட்டாக கையாடல் செய்ததாக சொல்லியுள்ளேன். அந்த கணக்கு சுமார் 40 வருடங்களாக உள்ளது. இந்த கணக்கை பராமரித்து வந்தவர்கள் அதற்கு முன் இராஜபாளையம் கூட்டுறவு வங்கியில் கணக்கு வைத்திருந்தார்களா என்று கேட்டால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வங்கி கணக்கை வாதி சங்கத்தின் பெயருக்கு மாற்றம் செய்ய மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் நாங்கள் தான் உண்மையான சங்கம் அதனால் எங்கள் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டோம் என்றால் சரிதான். வாதி பெயருக்கு அந்த கணக்கை மாற்றம் செய்தவுடன் 1ம் பிரதிவாதி மேற்படி வங்கியை அணுகி மாற்றம் செய்ததற்கு ஆட்சேபனை தெரிவித்தார் என்றால் சரிதான். பின்னர் வங்கி அதன் வழக்கறிஞரிடம் இது சம்மந்தமாக ஆலோசனை பெற்றது என்றால் தெரியாது. அதன் பின்னர் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு அந்த கணக்கு மீண்டும் மாற்றப்பட்டது என்றால் மாற்றப்படவில்லை ஆனால் அந்த கணக்கை நாங்கள் கையாள அனுமதிக்கவில்லை. வாசாஆ52 முதல் வாசாஆ54வரை தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் 1ம் பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல.

இருதரப்பு வழக்கறிஞர் கேட்டு கொண்டதற்கு இனங்க குறுக்கு விசாரணை இத்துடன் நிறுத்தப்பட்டது.